## முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

| | |
|---|---|
| அசல் வழக்கு எண். | நி.வே.இ.ம.எண்.409/2014 |
| எம்.சி.ஓ.பி.எண். | நி.வே.ம.எண்.45/2013 |

2022 ம் ஆண்டு ஜூலை மாதம் 05-ம் தேதி எதிர் மனுதாரர் தரப்பு சாட்சி எ.ம.சா.2-ன்வாக்குமூலம் 1989 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி திரு.எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெயகுமார் | ஜாதி | : | |
| த/பெ.பெயர் | : | | மதம் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| வட்டம் | : | | தொழில் | : | |
| மாவட்டம் | : | | வயது | : | |

முதல் விசாரணை:

நான் தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் சார் நிலை கருவூலத்தில் கூடுதல் சார்நிலை கருவூலராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்ற சம்மனில் கேட்கப்பட்டுள்ள ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 -ல் கண்ட ரூ 20/-க்கான நீதிமன்றம் சாரா முத்திரைத்தாள் எண்.08AA954578 எங்கள் கருவூலத்திற்கு 11.09.2006 தேதியில் தூத்துக்குடி மாவட்ட கருவூலத்தில் இருந்து எங்கள் சார்நிலை கருவூலத்திற்கு வரப்பெற்றது. மேற்படி நீதிமன்றம் சாரா முத்திரைத்தாள் எங்கள் அலுவலகத்தில் பெறப்படபோது அவை இரட்டை பூட்டு பதிவேடு ஆவணத்தில் பதிவு செய்யப்படும். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன் அதன் நகலை சான்று ஒப்பம் செய்து தாக்கல் செய்துள்ளேன். அது **எ.ம.சா.ஆ.5** ஆகும். மேற்படி முத்திரைத்தாள் சம்பந்தமாக எதிர் மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டன்படி மனு கொடுத்து, 01.07.2014 தேதியில் பதில் வழங்கப்பட்டுள்ளது. அது ஏற்கனவே எ.ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி முத்திரைத்தாள் எந்த முத்திரைத்தாள் ஏஜெண்டுக்கு விற்பனை செய்யப்பட்டது என்ற பதிவு குறித்த ஆவணங்கள் எங்கள் அலுவலகத்தில் தற்போது இல்லை. மாவட்ட கருவூலக அதிகாரி உத்தரவின் பேரில் அந்த ஆவணங்கள் 13.03.2019 தேதியில் தமிழ்நாடு காகித நிறுவனத்தின் மூலம் அழிக்கப்பட்டுவிட்டது.

அதற்கான ஒப்புகை சீட்டு மாவட்ட கருவூல அதிகாரியால் வழங்கப்பட்டுள்ளது. அதன் நகல் சான்று ஒப்பம் செய்து தாக்கல் செய்கிறேன், அது **எ.ம.சா.ஆ.6** ஆகும்.

**குறுக்கு விசாரணை:-**இல்லை.